# மிகுதி ஊழியர்கள் மீது என்ன நடவடிக்கை?

Registered as a Newspaper in Ceylon

★ ✱ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

மலர் 10
இதழ் 230
தேசிய தினசரி

[illegible] கீலக புரட்டாதி 12 றஜப் 5 சனிக்கிழமை (28-9-68)

## திறைசேரி கேட்கிறது

கொழும்பு, வெள்ளி

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு ஒரு தடவைகூடத் தோற்றத் தவறிய 1,016 புதிய அரசாங்க ஊழியர்களுக்கும் வேலைநீக்க 'நோட்டீஸ்' வழங்குவதற்கான அரசாங்க சேவைக்கமிஷனிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருக்கும் திறைசேரி சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றி, சித்திபெறத் தவறிய புதிய ஊழியர்கள் பற்றியும் முதலாம் இரண்டாந்தரப் பரீட்சைகளில் சித்திபெறத் தவறிய ஊழியர் பற்றியும் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றியும் அரசாங்க சேவைக் கமிஷனிடம் கேட்டிருக்கிறது.

சிங்களத் தேர்ச்சியில் பரீட்சைக்கு ஒரு தடவைகூடத் தோற்றாத ஊழியர் 1,016 பேராகும். பரீட்சைக்குத் தோற்றியும் சித்தியடையாத ஊழியரின் எண்ணிக்கை 1,300. முதலாம் இரண்டாந்தரப் பரீட்சைகளில் சித்திபெற்று மூன்றாந்தரப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெறாத ஊழியர்கள் 1,008 பேராகும்.

# அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழரசார் வாக்களித்தனர்

## ஆட்சிமன்றத்தில் நடந்த திடீர் வாக்கெடுப்பு

### டாக்டர் என். எம். மிடம் மன்னிப்பு கேட்டார் டாக்டர் நாகநாதன்

கொழும்பு, வெள்ளி

மக்கள் பிரதிநிதிகள்சபையில் இன்று பிற்பகல் உபமானப் பிரேரணையொன்றின்மீது விவாதம் நடைபெற்று முடிந்ததும் அதன்மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர். பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகளும் வாக்களித்தனர். அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சியினர் வெளியேறிய பின்னர் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற முதல் வாக்கெடுப்பு இதுதான்.

இதில் அரசாங்கத்தை ஆதரித்து தமிழரசுக்கட்சியினர் வாக்களித்தனர். உபமானப் பிரேரணைக்கு ஆதரவாக 54 வாக்குகளும் எதிராக 18 வாக்குகளும் கிடைத்தன.

#### நாகநாதன் மன்னிப்பு கேட்டார்

மருந்துகள் இறக்குமதிசம்பந்தமான உபமானப் பிரேரணைமீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது டாக்டர் என். எம். பெரேராமீது நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் தாக்குதல் தொடுத்தார்.

மருந்து விற்பனையில் டாக்டர் கமிஷன் பெறுவதாக டாக்டர் பெரேரா கூறியதாகக் குறிப்பிட்ட டாக்டர் நாகநாதன், நிதியமைச்சராக இருந்த பொழுது டாக்டர் பெரேரா கமிஷன் பெற்றார் என்று குறிப்பிட்டார். 'நீர் ஒரு இலஞ்சம் மனிதர்' என்றும் டாக்டர் பெரேராவை பார்த்து டாக்டர் நாகநாதன் கூறினார்.

இச்சமயத்தில் திரு. லெஸ்லி

[8-ம் பக்கம் பார்க்க]

## ரூ. 21,000 பெறுமதியான தங்கம் இறக்குமதி

வெள்ளவத்தை, வெள்ளி

இலங்கையிலுள்ள நகைத் தொழிலாளர், தங்க வியாபாரிகளுக்காக இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டிலிருந்து 21,000 ரூபா பெறுமதியான தங்கத்தை இறக்குமதி செய்யவிருக்கிறது. இதற்கான அனுமதியை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் வழங்கியுள்ளது.

## சீனி உற்பத்தி இலங்கையில் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், சனி

கந்தளாயில் சீனி உற்பத்தி செய்வதினால் 1965, 66-ம் ஆண்டில் மட்டும் 1,845,922,00 ரூபா அந்நியச் செலாவணி மீதப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுதவிர இதே ஆண்டில் மதுவரித் திணைக்களத்துக்கு 717 295,4 கலன் மதுசாரம் விற்றமையினால் அதற்குரிய அளவு அந்நியச் செலாவணியும் மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவ்விபரங்கள் ஸ்ரீ லங்கா சீனித் தொழிற் கூட்டுஸ்தாபனத்தின் 1965, 66ம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுஸ்தாபனம் சீனிக்கு மிகக் குறைந்த விலையையே கொடுத்துள்ள போதும் குறிப்பிட்ட காலத்தில் சுமார் 65 லட்சம் நிகர லாபமாக சீனித்தொழிற் சாலைக்குக் கிடைத்துள்ளதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனிக்குத் தேவைப்படும் பொருட்களின் குறைந்த விலைகளின் காரணமாக கூட்டுஸ்தாபனம் சீனி உற்பத்தியினால் உண்டாகும் நட்டத்தைக் குறைக்க முடியாமல் [illegible]

8-ம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமெரிக்க தூதர் ராஜினாமா

நியூயோர்க், செப். 27

ஐ.நா. அமெரிக்கத் தூதர் திரு. ஜோர்ஜ்போல் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் திரு. ஹம்பிரியின் சார்பாக பிரச்சாரத்திலீடுபடவே இவர் இவ்வாறு ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் பாலித்தீவு கபாலவிநாயகர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் இந்தோனேஷிய பாலித்தீவு கபாலவிநாயகர் விக்கிரகம் இன்று மாலை 6 மணியிலிருந்து இரவு 8மணிவரை தரிசனத்துக்கு வைக்கப்படும்.

இக் காட்சியை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. க. பேரம்பலம் திறந்துவைப்பார்.

29ம், 30ம் திகதிகளில் காலை 10மணி தொடக்கம் இரவு 5 மணிவரை தரிசிக்கலாம்.

இந்த விக்கிரகம் சுமார் 1250 வருடங்களுக்கு முன் இந்தோனேஷியாவில் வாழ்ந்த மக்களால் வணங்கிவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஜனசமூக நிலைய இயக்கம்

கொழும்பு, வெள்ளி

இதுவரை உள்நாட்டமைச்சின்கீழிருந்த ஜனசமூக நிலைய இயக்கம் இனிமேல் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகிறது.

உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு. எம். திருச்செல்வம், ஜனசமூக நிலைய இயக்கம் உள்ளூராட்சி அமைச்சின்கீழ் கொண்டுவரப்படவேண்டுமெனக் கேட்டிருந்தார். இப்பொழுது அந்த யோசனைக்கு பிரதமர் அங்கீகாரமளித்துவிட்டார்.

ஜனசமூக நிலையங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டிருக்கிறது.

## அறிவித்தல்

பரதநாட்டிய வகுப்புக்கள் 1-10-68 விஜயதசமியன்று காலை 10-30 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து வேறு தினங்களிலும் அதற்கு முந்திய தினமும் ஏழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

ஞானமணி செலியா

GNANAMANNII SELIYA
BHARATHI KALAA MANRAM
THIRUNELVELY.

## DON'T MISS THE OPPORTUNITY!

## USE OF COSMETICS

A GALA BEAUTY Expert will demonstrate the use of a wide range of COSMETICS of the GALA COSMETIC GROUP at the first floor of the JAFFNA CO-OPERATIVE STORES LIMITED at 10-00 a m. today the 28th September, 1968.

Free advice will be given individually, to all ladies present, on the correct colour of powder and other beauty aids which they should use to enhance their natural beauty.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்கா மேற்பார்வையாளர் பதவி

## யாழ்ப்பாண மாநகரசபை

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் கோரப்படுகின்றன.

தகுதி:- விண்ணப்பதாரர் கள் 1-10-68-ம் திகதியன்று 40 வயதுக்குட்பட்டவர்களாகவும் பின் வரும் தகைமைகளை உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பேராதனை விவசாயப் பாடசாலையின் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரமும் அல்லது இதற்குச் சமமான தராதரமும், அத்துடன் பேராதனை அரசினர் பூங்கா கல்லூரியில் அல்லது இதற்குச் சமமான வெளிநாட்டு நிலையத்தில் தோட்டக்கலை, இதன் தொடர்பான பாடங்கள் ஆகியவற்றில் இரண்டு வருட பயிற்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்:- வருடமொன்றுக்கு ரூபா 840 — 5 X 72 — 1200/- ஆகும்.

தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளும், சமீபகாலத்திய இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களின் முடிவு திகதி 30-9-68 ஆகும். இம் முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எதுவும் நிராகரிக்கப்படும்.

எந்த விதத்திலும் ஆதரவு தேட முற்படும் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் தகுதியற்றதாகக் கருதப்படும்.

மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-9-68. 998

# போர்த்துக்கலின் புதிய பிரதமர்

லிஸ்பன், செப். 27

போர்த்துக்கலின் புதிய பிரதமராக டாக்டர் கெய்தானோ என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 36 வருடங்களாகப் பிரதமர் பதவியிலமர்ந்து நாட்டின் சர்வாதிகாரியென திகழ்ந்த டாக்டர் சலஸார், மூளையில் ஏற்பட்ட நோய் காரணமாக கடுமையான சுகவீனமுற்றிருப்பதாலேயே புதிய பிரதமராக டாக்டர் கெய்தானோ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## விருந்து அளித்தனர்

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

அமெரிக்க 4-எச் கழக அங்கத்தவரும் சர்வதேச இளைஞர் விவசாயக் கழகப் பிரதிநிதியுமான திரு றேமண்ட் வில்லியம் என்பவருக்கு ஊரெழு வாரி இளைஞர் விவசாயக் கழகக்கலைவாணி மாதர் சங்கம் ஆகியன விருந்துபசாரமளித்தன.

2வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
என். டி. ராமராவ்
ஜெயலலிதா, ராஜஸ்ரீ
நடித்த
**அபூர்வப்பிறவிகள்**

94-வது தினம்!
**ராணி**
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
**பணமா பாசமா**

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு தினங்களில் 2-30
ஜெய்சங்கர்-விஜயலக்ஷ்மி
நடித்த
**வல்லவன் ஒருவன்**

# ரஷ்ய விண்கலம் பம்பாய் வரும்

பம்பாய், செப். 27

சமீபத்தில் சந்திரனை சுற்றி வந்த ரஷ்ய விண்கலம் பம்பாய்க்குக் கொண்டுவரப்படவிருக்கிறது. இங்கு இது பார்வைக்கு வைக்கப்படவிருக்கிறது. இந்த விண்கலம் இந்து சமுத்திரத்தில் இறங்கியது தெரிந்ததே.

# நஷ்டத்தை ஈடுசெய்யும் மதுபானம்

யாழ்ப்பாணம், சனி

சீனி உற்பத்தியினால் அரசாங்கத்துக்கு நஷ்டமே ஏற்படுகின்றதாம். ஆனால் இந்த நஷ்டத்தை குடிவகை விற்பனைக்கு கரும்பின் மதுசாரத்தை விற்பதால் கிடைக்கும் இலாபம் ஈடுசெய்கின்றது.

சீனிக் கூட்டுஸ்தாபனத்தின் 1965-ம், 66-ம் ஆண்டு அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் 717,295.4 புறூப் கலன் மதுசாரம் மட்டும் மதுவரித் திணைக்களத்துக்கு இங்கிருந்து விற்கப்பட்டுள்ளது. இந்த மதுசாரம் முழுவதும் சாராயத்துடன் கலப்பதற்காகவே விற்பனை செய்யப்பட்டதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் நுகரப்படும் சாராயத்தில் 100-க்கு 33·85 வீதம் மதுரசம் இங்கிருந்து கொடுத்த இரண்டாவது வருடமும் தொடர்ச்சியாக மதுவரி இலாகாவுக்குக் குடிவகை உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களிலும் இது முதலிடம் வகித்து வருவதாகவும் அறிக்கையில் விசேஷமாகக் குறிப்பிட்டுள்ளது. [கா. நி]

## விளையாட்டமைச்சிடம் நிதிகோருவர்

பண்டத்தரிப்பு, வியா:

வலிகாமம் வடக்கு விளையாட்டுப்போதனை உத்தியோகத்தர் அரசாங்கத்திடம் விளையாட்டுத் துறைக்கு நன்கொடை பெறும் திட்டத்தை தவிப்பமைக் கிராமசபைக் கட்டத்தில் விளக்கி கூறினார்.

இதனைத்தொடர்ந்து கீரிமலையில் நீச்சல் தடாகத்தை அமைக்கவும் இரவர் விளையாட்டு மைதானம் அமைக்கவும் விளையாட்டு அமைச்சிடம் நிதிகோரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தெல்லிப்பளை கிராமசபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## தெல்லிப்பளை கி. ச. வீதிகள் திருத்தம்

பண்டத்தரிப்பு, வியா:

தெல்லிப்பழை கிராமசபை எல்லைக்குள் அடங்கிய சிராவனை, தலைக்கீர் ஆனைவிழுந்தான், கழுத்தாவத்தை, காட்டாவத்தை ஆகிய வீதிகள் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Michael Caine
in
Funeral In Berlin
(Techni color)

# திருமலைச் செய்திகள்

## ஸி. ஐ. டியாக நடித்தாராம்

திருகோணமலை நீதிமன்றத்தில் புகுந்த தாம் ஒரு ஸி ஐ டி. பொலிஸ் என்று காவலாளியிடம் கூறி நடித்து அங்கிருந்த பொலிசாரின் குறிப்புப் புத்தகங்களை கிறுக்கி சேட்டைகள் பண்ணியதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் முத்துக்குமாரு தளயாகசிங்கம் இம்மாதம் 25-ம் திகதி திருகோணமலை மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் அனுராதபுர மாவட்ட மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவார்.

## தற்கொலை

நான் பாடசாலைக்குப் புறப்படும்போது எனது தந்தை என்னைக் கூப்பிட்டு நான் திரும்பிவரும் போது தாம் உயிருடன் இருக்க மாட்டார் என்றும் அதன் பின்பு ஒருபோதும் அவரை நான் பார்க்க முடியாதென்றும் கூறி என்னைக் கட்டி அணைத்து முத்தமிட்டுவிட்டு என்னையும் முத்தம் தரும்படி கேட்டார் என அழுது கொண்டே பொலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார் ஆறு வயதுடைய ஷிராணி நேசராசா நீர்ப்பாசனப்பகுதியில் தொழில்நுட்ப உதவியாளராயிருந்து தற்கொலை செய்துகொண்டவரின் லோ தேசராசாவின் மரணவிசாரணையின் போதே ஷிராணி மேற்கண்டவாறு கூறினாள். இவர் 4 குழந்தைகளின் தந்தையாவார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே இவரது மனைவி 4-வது குழந்தையைப் பெற்றெடுத்தார் இவர் எழுதி வைத்த கடிதத்தில் தனது இளைய சகோதரியை கவனமாக பார்த்துக்கொள்ளும்படி குறிப்பிட்டிருந்தார்.

# வரி விளம்பரம்

## தேவை

அனுபவமுள்ள கஷியர் தேவை. "டைப்பிங்" தெரிந்தவரும், மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் விரும்பத்தக்கது. பிணைப்பணம் கட்டவேண்டும். விண்ணப்பிக்கவும். 12, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 231

## விற்பனைக்கு

1. தலைவாசல் 18 முழம், 9 முழம் 6 வேப்பமரப்பிடிகளுடன் 2. வளமல் விலைக் கண்டுகள் விற்பனைக்குண்டு. 91/A, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். 232

# கொழும்பிலிருந்து அனுப்பாதீர்

## கி: சபை தீர்மானம்

அளவெட்டி வெள்ளி

பலாலியில் அமையும் கனிஷ்ட பல்கலைக் கழகத்துக்கு தேவையான உத்தியோகஸ்தர்களை கொழும்பிலிருந்து நியமனத்துக்கு அனுப்புவது முறையினமான செயல் என்றும் யாழ் தொழில்நுட்பக் கல்லூரி அங்கத்தவராய் இருக்கும் ஊழியர்களையே நியமிக்க வேண்டுமென்றும் கோரும் தீர்மானமொன்று மயிலிட்டி கிராமசபையின் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

# செபமாலை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா திருநாள் இன்று மாலை 4மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 6-ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். வண பிதா சந்திரசேப்பிள்ளை விழாவை நடாத்திவைப்பார். (த.நி)

இறைவன் திருமேனியை
**சந்தனக்காப்பிட்டு**
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது
உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும்
**பச்சை சந்தனம்**
யாழ்ப்பாணம், 73, மின்சார நிலைய வீதியிலுள்ள
**சுந்தரம் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தில்
எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்கு செய்திருப்பது
மிகவும் போற்றுதற்குரியதாகும்.

மகத்தான 2வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (கண்டிநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
கலைப்பேரரசர்
**எம். ஜி. ராமச்சந்திரன்**
கன்னடத்து பைங்கிளி
**சரோஜாதேவி**
கே. ஆர். விஜயா - மனோகர் - நாகேஷ்



நடித்த
**நான் ஆணையிட்டால்**

கிங்ஸ்லி
(கொழும்பு)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
**நான்**

# காந்தி நூற்றாண்டு மலர்

100-வது ஆண்டு விழாவுக்காக இந்திய அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட சிறுவர்க்கான நூல், உலகம் போற்றும் உத்தமர் மகாத்மாவின் வாழ்க்கை முழுதும் கலர் சித்திரக் கதையாக வந்துள்ளது. 270 மூவர்ணப் படங்கள் தடித்த அட்டையுடன் கூடியது. ஒவ்வொரு குழந்தைகள் கையிலுமிருக்கவேண்டியது. கதையைப் படிக்கும் குழந்தைகள், மகாத்மாவின் வாழ்க்கையையும், அவரின் சித்திரப் படங்களையும் திருப்பித் திருப்பி பல முறை படித்து, இளமையிலேயே, சத்தியத்தையும், உண்மையையும் பெற்றோரின் சொற் கேட்டு நடந்ததையும் படித்து அவர்கள் இளம் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதியக்கூடியது. படிக்க முடியாத குழந்தைகளும் படங்களைக் கண்டால் படிக்கத் திய ஆசைப்படுவார்கள். இப்படங்களை கண்ணாடிச் சட்டம் போட்டு வைப்பதற்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

தமிழ் — விலை ரூ. 3-50
ஆங்கிலம் — விலை ரூ. 3-50
கிடைக்குமிடம்
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
234, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு வல்லரசுகள் உச்சிமாநாட்டுக்கு ஐ. நா. பொதுக்காரியதரிசி அழைப்பு

## மோசமாகி வரும் சர்வதேச நிலைமையைக் குறைக்க வழி

நியூயோர்க். செப். 27

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் உச்சிமாநாடொன்றுக்கு ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் அழைப்பு விடுத்துள்ளார். மோசமாகிவரும் சர்வதேச நிலைமையைச் சீர்ப்படுத்தும் நோக்கமாக, இந்த நான்கு வல்லரசுகளின் மாநாடொன்று நடைபெற வேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமது 1967—68ம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில், ஐ. நா.வின் 23-வது கூட்டத்தொடரில் நேற்று யூதாண்ட் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்கு—மேற்கு உறவுகள் மோசமடைந்து வருவதாகவும், இதைத் தடுக்க இத்தகைய வல்லரசுகளின் உச்சிமாநாடொன்று அவசியமெனவும் குறிப்பிட்ட ஐ. நா. பொதுக்காரியதரிசி உலக சமாதானத்துக்கான திறவுகோல் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இரண்டு வல்லரசுகளின் கைகளிலேயே இருப்பதாகவும் கூறினர்.

### பலாத்காரத்துக்கு கண்டனம்

ரஷ்யா, அமெரிக்கா போன்ற வல்லரசுகள் தமது பாதுகாப்புக்கு ஏதாவது ஆபத்துப் பயமுறுத்தல் இருக்கக் கண்டதும் அதி விரைவாகவும் அதிக அளவிலும் பலாத்காரத்தைக் கடைப்பிடித்துவரும் கொள்கையை யூதாண்ட் கண்டித்தார்.

நான்கு வல்லரசுகளின் உச்சிமாநாட்டுக்கான ஆயத்தங்களைச் செய்யுமுகமாக அவற்றின் வெளியுறவுமந்திரிகள், தற்போதைய கூட்டத் தொடரின்போதே சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தலாம் என்று அவர் ஆலோசனை தெரிவித்தார்.

தாம் 1967ம் ஆண்டு ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தபடியே அந்த ஆண்டு முழுவதும் உலக அமைதிக்கு ஆபத்தான நிலை தொடர்ந்து இருந்துவந்துள்ளதாக யூதாண்ட் தமது அறிக்கையில் கூறினர்.

### வியட்னாம்

வியட்னாம்பற்றி அவர் குறிப்பிடுகையில், பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த அளவிற்குப் பயனளிக்கவில்லை என்றார். வடவியட்னாம் மீதான குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் யூதாண்ட் வலியுறுத்தினர்.

வியட்னாமில் மட்டுமின்றி அதனைச் சுற்றியுள்ள பிராந்தியத்திலேயே அமைதியை உறுதிப்படுத்த இந்தோசீனு மீதான உடன்படிக்கை போன்ற ஓர் உடன்படிக்கையை வல்லரசுகள் உருவாக்க வேண்டியது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டார்.

### மேற்கு ஆசியா

மேற்கு ஆசியப் பிரச்னை பற்றி யூதாண்ட் குறிப்பிடுகையில், மேற்கு ஆசியா ஐ. நா. பிரதிநிதி டாக்டர் ஜாரிங் மூலம் இஸ்ரேலுடனுன மறைமுகப் பேச்சுவார்த்தைகளுக்கு அரபு நாடுகள் தயாராகவிருப்பதாகத் தம்மிடம் விருப்பம் தெரிவித்துள்ளதாக முதல் தடவையாகத் தெரிவித்தார். ஆனால், இஸ்ரேலோ அரபு நாடுகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்குக் கோரி வந்துள்ளது.



### செக். பிரச்னை

செக்கோஸ்லாவாக்கியாவிற்குள் வார்ஸோ துருப்புகள் பிரவேசித்துள்ளன. அந்நாட்டில் நீண்ட நிழல் படியச் செய்துள்ளதாகவும் அமைதியற்ற, பத்திரமில்லாத உணர்ச்சியை அங்கு தோற்றுவித்துள்ளதாகவும் யூதாண்ட் குறிப்பிட்டார். அங்கிருந்து அத்துருப்புகள் வெளியேற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

உலக நாடுகள் தமக்கிடையேயான பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மேலும் மேலும் பலாத்கார நடவடிக்கைகளையே கடைப்பிடிப்பதையிட்டு ஐ. நா. பொதுக்காரியதரிசி தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

[7-ம் பக்கம் பார்க்க]

## சாம்ராஜ்ய நிதி மந்திரிகள் மாநாடு முடிவுற்றது

லண்டன், செப். 27

சாம்ராஜ்ய நாடுகளின் நிதிமந்திரிகளின் இரண்டு நாள் வருடாந்த மாநாடு நேற்று இங்கு முடிவுற்றது.

ஸ்டேர்லிங் நிதிப் பிராந்தியத்தை எதிர்காலத்தில் பலப்படுத்துவதற்கான ஆலோசனைகளைத் தொடர்ந்து நடாத்துவதென்ற உடன்பாட்டுடன், நிதி மந்திரிகள், தமது தற்போதைய பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டனர்.

பிரிட்டனின் நிதி நிலைமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையிட்டு மாநாடு திருப்தி தெரிவித்தது. ஸ்டேர்லிங் பிராந்தியத்துக்குப் பிரிட்டனின் உறுதியான நிதி நிலைமை அத்தியாவசியமானது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் நிதியுதவிக்கான சாத்தியக்கூறுகள், உலகரீதியில், ஓரளவு ஏமாற்றத்தையே அளிப்பதாக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெய்ப்பூருக்கருகே இரண்டு பிரயாணிகள் பஸ்கள் மோதின

### 9 பேர் மரணம்: 28 பேருக்குக் காயம்

ஜெய்ப்பூர், செப். 27

ராஜஸ்தானில், ஜெய்ப்பூருக்கருகே நடைபெற்ற பஸ் விபத்தொன்றில், 9 பேர் உயிரிழந்தனர். மற்றும் 28 பேர் காயமுற்றனர். இவர்களில் பலருக்குக் கடுமையான காயங்களேற்பட்டுள்ளன. இவர்களது நிலை கவலைக்கிடமாயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பிரயாணிகள் பஸ்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதன் விளைவாகவே இவ்விபத்து ஏற்பட்டது. நால்வர், விபத்து நடந்த இடத்திலேயே இறந்தனர். ஒரு இளைஞனுட்பட மற்றும் நால்வர், ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமடைந்தனர். ஒருவர் ஆஸ்பத்திரியில் உயிர் நீத்தார்.

## அமெரிக்காவின் ஐ.நா. பிரதிநிதி ஜோர்ஜ்போல் ராஜினமா

வாஷிங்டன், செப். 27

ஐ. நா. வில் அமெரிக்காவின் பிரதான பிரதிநிதியான திரு. ஜோர்ஜ் போல் அப்பதவியிலிருந்தும் தமது ராஜினமாவைச் சமர்ப்பித்துள்ளார். எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தேர்வில், ஜனநாயகக்கட்சி சார்பாகப் போட்டியிடும் உப ஜனாதிபதி திரு. ஹியூபெட் ஹம்ப்ரிக்காகத் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்குவதற்காகவே அவர் ராஜினமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர், 6 மாதங்களுக்கு முன்தான் இப்பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு. போலின் ராஜினமாவை ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், சொந்தக் காரணங்களுக்காகவே திரு. போல் ராஜினமாச் செய்துள்ளதாகவும், அவருக்கும் அமெரிக்கக் கொள்கைக்குமிடையே எவ்வித அபிப்பிராய பேதங்களும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

திரு. ஜோர்ஜ் போலின் இடத்துக்கு, 65 வயதான, "வாஷிங்டன்போஸ்ட்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் திரு. ஜேம்ஸ் ரஸல் விக்கின்ஸ், அமெரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## "பியாவ்ரா"வின் விடுதலைப் போராட்டம் முடிவுறவில்லை'

### தலைவர் ஒஜுக்கு கூறுகிறர்

லாகோஸ், செப். 27

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற, "பியாவ்ரா" என அழைக்கப்படும் கிழக்கு நைஜீரியா, தனது விடுதலைப்போராட்டத்தைக் கைவிடுமென்ற செய்தியை 'வெறும் பித்தலாட்டம்' என்று அதன் தலைவரான கேர்னல் ஒஜுக்கு வர்ணித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பியாவ்ராவின் கடைசிக் கேந்திர ஸ்தானத்தின் மீது இப்போது சமஷ்டி நைஜீரியத்துருப்புகளின் தாக்குதல் நடைபெற்று வருவதை ஒப்புக் கொண்ட அவர் அதே நேரத்தில், நைஜீரிய உள்நாட்டுப்போர் முடிவுறும் தறுவாயில் இருக்கிறதென்பதையோ அல்லது பியாவ்ரா தனது போராட்டத்தை இத்துடன் கைவிடுமென்பதையோ ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

சமஷ்டித் துருப்புகளின் தாக்குதலை முறியடிக்க 'பியாவ்ரா'த் துருப்புகள் சகல இடங்களிலிருந்தும் ஒன்று குவிக்கப்பட்டு வருவதுடன், தமது பிராந்தியத்தின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

### செப்போர்ட் பிரபு

இதற்கிடையில், சமஷ்டி நைஜீரியத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துமுகமாக லாகோஸ் வந்துள்ள பிரிட்டிஷ் மந்திரி செப்போர்ட் பிரபு, சமஷ்டித் தலைவர்களுடன் நேற்றுத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

---

### அரபு லீக்கிலிருந்து டுனீஷியா விலகியது

டுனிஸ். செப். 27

டுனீஷியா, அரபு லீக்கிலிருந்து விலகிக்கொண்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக, அரபு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை வளர்க்க, அரபு லீக் தவறிவிட்டதாலேயே தான் விலகுவதாக டுனீஷியா அறிவித்துள்ளது.

## அணுசக்தியைச் சமாதான நோக்கத்துக்கு பயன்படுத்த உடன்படிக்கை

### இந்தியாவும், பிரேஸிலும் விரைவில் கைச்சாத்திடும்

பிரேஸிலியா, செப். 27

அணுசக்தியை சமாதான நோக்கங்களுக்குப்பயன் படுத்துவது சம்பந்தமான உடன்படிக்கை ஒன்று இந்தியாவுக்கும் பிரேஸிலுக்குமிடையே வெகுவிரைவில் ஏற்படலாம் என்ற நம்பிக்கையை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு வெளியிட்டுள்ளார்,

பிரேஸிலை விட்டு மற்றுமோர் லத்தீன் அமெரிக்க நாடான உருகுவேக்குப் புறப்படமுன்னர் பிரேஸிலின் தலைநகராகிய பிரேஸிலியாவில் திருமதி இந்திரா அளித்த கடைசிப்பத்திரிகை மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

ஐ. நா.ஸ்தாபனத்தில் இந்தியாவும் பிரேசிலும் ஒரு [illegible] இந்தியப் பிரதமர் உலக விஷயங்களில் இரு நாடுகளுக்குமிடையே இன்னும் அதிகமான ஒத்துழைப்புக்குத் தமது விஜயம் வழிவகுக்குமென தாம் நம்புவதாகவும் கூறினர்.

### இந்தியா ஏற்கவில்லை

உலக நாடுகளிடையே அமைதி உள்ளதாக முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளும் ஒரு நிலையை அடிப்படையாகக் கொண்ட வல்லரசுகள் சக்திச் சமன் நிலைக் கொள்கையை இந்திய ஒருபோதும் ஏற்றதில்லை என்று திருமதி இந்திரா தெரிவித்தார்.

உலகில் பணக்கார, ஏழை நாடுகளுக்கிடையேயான பேதம் நிலவும் வரை அமைதி நிலவுவதென்பது கஷ்டமான காரியமே என்றார். அவர். அப்பேதங்கள் நீக்கப்படவேண்டிய அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

### இந்தியா பாகிஸ்தான் உறவுகள்

இந்தியா — பாகிஸ்தான் உறவுகள் பற்றி பிரதமர் இந்திரா குறிப்பிடுகையில் தாஷ்கெண்ட் உடன்படிக்கை அதுகொடுப்பிய நம்பிக்கைகளுக்கேற்ப வாழவில்லையென்று கூறினர். அந்த உடன்படிக்கையை அமுல் நடத்துமுகமாக இந்தியா நன்னோக்கான முயற்சிகளை எடுத்துவந்தபோதிலும் பாகிஸ்தானிடமிருந்து அதற்கு இணக்கமில்லை என்றும், ஆகவே முயற்சிகள் தொடர்ந்து ஒருபக்க முயற்சிகளாகவே இருந்து வருவதாகவும் இந்தியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இம்சிக்காமல் இருப்பது மாத்திரம் அல்ல அகிம்சை. எல்லோரையும் நேசிக்கவேண்டும். தீமையை எதிர்க்கிறேன். ஆனால் எதிரியை நேசிக்கிறேன்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU
Post Box: 49 Jaffna.
Telephone 389.

யாழ்ப்பாணம் சிவகைலாசம் பிரசுரம் மடத்தினம் 12-ந்திகதி
(28-9-68)

# பல்கலைக்கழக இட நெருக்கடி

பல்கலைக்கழகத்தில் சேர்ந்து உயர் கல்வி பெறுவதற்குத் தகுதியிருந்தும்கூட 935 கலைப்பகுதி மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. பல்கலைக்கழகங்களில் நிலவும் இடநெருக்கடிதான் இதற்குக் காரணம். இத்தகவலை கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லே தெரிவித்திருக்கிறார். கண் விழித்துக் கஷ்டப்பட்டுப் படித்த இந்த மாணவர்களின் நிலை என்ன? இவர்களுக்காகப் பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்து இன்னும் சில ஆண்டுகளில் பட்டதாரிகளாகிவிடுவார்கள், உழைத்து வயதுபோன காலத்தில் தங்களைக் கவனிப்பார்கள் என்ற ஆசையோடு எதிர்பார்த்து ஆண்டுகளை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த பெற்றோர்களின் நிலை என்ன? பல்கலைக்கழகங்களில் நிலவும் இட நெருக்கடிக்கு இந்த மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் என்ன செய்வது?

பல்கலைக்கழகங்களில் இடநெருக்கடி ஏற்படுமென்பது இன்றுதான் தெரிந்து கொண்ட விஷயமல்ல. பல வருடங்களுக்கு முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுதான். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் மற்றும் பல கமிஷன்களும் நாட்டின் இதர பகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர். யாழ்ப்பாணம், காலி, கண்டி ஆகிய இடங்களில் மூன்று பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை சேர் நிக்கலஸ் அட்டிகலே ஒரு தடவையல்ல பல தடவைகள் வற்புறுத்தியிருந்தார். கொழும்பு, கண்டி பல்கலைக்கழகங்கள் மட்டுமல்லாமல் வித்தியாலங்கார வித்தியோதய பிரிவினாக்கள் அவசர அவசரமாக அமைக்கப்பட்டு அவை பல்கலைக்கழகங்களாக்கப்பட்டன. இவைகளையும் சேர்த்து இன்று நான்கு பல்கலைக்கழகங்களிருப்பினும், பல்கலைக்கழக இட நெருக்கடி காரணமாக மாணவர் தெரிவில் கடும் விதிமுறைகள் அனுஷ்டித்தும்கூட இன்னும் கணிசமான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்புப் பெற முடியாத நிலையிலிருக்கின்றனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு தமிழ்மூலம் போதனையளிப்பதற்கு தமிழ் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இல்லாததால் இங்குள்ள தமிழ் மாணவர்களை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தற்காலிகமாக அனுப்புவதற்கு தேசிய உயர்கல்விச்சபை ஒழுங்கு செய்துள்ளதாம். பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெறுவதற்குத் தகுதியிருந்தாலும் பல்கலைக்கழகங்களில் இடமில்லாமையால், உயர் கல்வி பெற முடியாத நிலை ஒருபுறம். பல்கலைக்கழகத்தில் அதிர்ஷ்டவசமாக இடம் கிடைத்த போதிலும் அங்கு தாங்கள் கல்விகற்ற மொழியில் கல்விப்போதனை பெற முடியாத துரதிர்ஷ்டம் தமிழ் மாணவர்களுக்கு மறுபுறம். இவைதவிர யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து உயர் கல்வி பெறுவதற்காக கொழும்புக்கும் கண்டிக்கும் செல்லும் மாணவ மாணவிகளும் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இதுபற்றி பலரும் பல தடவைகளிலும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். நாமும் இப்பத்திகளில் பல தடவை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

பல்கலைக்கழக இட நெருக்கடி தீரவும், தமிழ் மூலம் கல்விகற்ற மாணவர்களுக்கு வேண்டிய விரிவுரையாளர்கள், பேராசிரியர்களின் தட்டுப்பாடு நீங்கவும், வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கும் கண்டிக்கும் உயர் கல்வி பெறச் செல்லும் மாணவ மாணவிகளின் கஷ்டங்கள் நீங்கவும், அவர்களின் பெற்றோரின் பணச்செலவும், மனக்கஷ்டமும் குறையவும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்த இடத்திலாவது என்ன பெயரிலாவது ஒரு பல்கலைக்கழகத்தை விரைவில் ஆரம்பிக்க வேண்டியது அவசியம். இராமநாதன் பல்கலைக்கழகமா, தமிழ்ப் பல்கலைக்கழகமா என்று தமிழ்த் தலைவர்கள் சர்ச்சை செய்வதை சாதகமாக்கிக் கொண்டு தமிழ் மக்களின் வசதிக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதைத் தட்டிக்கழித்துவருவது நியாயமல்ல. தமிழ்த் தலைவர்களும் பல்கலைக்கழக சர்ச்சைக்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டும். இங்கு ஒரு பல்கலைக்கழகம் கிடைப்பதற்கு அவர்கள் தடையாக இருந்தவர்கள் என்ற வருங்காலச் சந்ததியின் சாபத்துக்கு அவர்கள் உள்ளாகக் கூடாது.

# சிவாலயம் அமைக்கப்படும்

உடுவில், வெள்ளி

வவனிக்குளம் கோபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன சிவாலயம் இருந்த இடத்தை, புதைபொருளாராய்ச்சி அதிபர் கலாநிதி பி. எச். டி. சில்வாவும், யாழ்ப்பாண உதவி ஆராய்ச்சி அதிபர் திரு. சி. முருகேசபிள்ளையும் பார்வையிட்டனர்.

மேற்படி சிவாலயம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் ஒரு பௌத்த விகாரை இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்துத்தருவதாகப் புதைபொருளாராய்ச்சி அதிபர் தெரிவித்தார்.

# பாதம் பணிந்து இன்புறுவோம்

— பசுவூர் சு. மகாலிங்கசிவம் —

சங்கப் புலவர் நாவமர்ந்து
தரணி போற்றச் சந்ததமும்
மங்கா மாண்புக் காவியங்கள்
மலர் முன்னுள் வழியமைத்த
பங்க ஐஞ்சேர் வாணியுன்றன்
பாதம் பணிந்து வாசமைத்து
எங்கள் வாழ்வில் எதிர்காலம்
ஏற்றம் காண்போம்! இன்புறுவோம்!

இயலும், இசையும், நாடகமும்
எங்கள் வாழ்வில் வளமோங்க
பயிலும் எண்ணச் சிறுவர்குழாம்
பண்பாய்க் கலைகள் பலவாம,
அயர்ந்தாங் டலர்வோம் அயர்வற்றே
ஆயிரம் தொழில்கள் பாமாற்ற
தயவோ டுன்றன் தாள்தொழுதோம்
தருவாய் கருணை கலைவாணி!

# இலங்கைப் பிரதிநிதியாக ஜப்பான்பயணம்

யாழ்ப்பாணம், சனி

பொருளாதாரத் திட்ட அமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆராய்ச்சி அதிபர் திரு. எஸ். செல்வரத்தினம் இம்மாதக் கடைசியில் ஜப்பானுக்கு விமானமூலம் செல்கிறார். உலகத் தொழில் ஸ்தாபனத்தின் ஆதரவில் ஒக்டோபர் மாதம் 7-ந்திகதி தொடக்கம் 26-ந்திகதி வரை நடக்கவிருக்கும் மனித வளங்குறித்த மகாநாட்டில் இவர் இலங்கையின் ஏகப் பிரதிநிதியாகக் கலந்து கொள்வார்.

1963-ம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற ஆசிய ஜனத்தொகை மகாநாட்டிலும் 1965-ம் ஆண்டு பெல்கிரேட் நகரில் நடைபெற்ற உலக ஜனத்தொகை மகாநாட்டிலும் இவர் ஐக்கிய தேசியஸ்தாபனத்தின் காரியதரிசி திரு. யூதாண்டின் அழைப்பை ஏற்றுக் கலந்து கொண்டார். 1966-ம்ஆண்டு முற்பகுதியில் டோக்கியோவில் நடைபெற்ற பசிபிக் விஞ்ஞான மகாநாட்டில் ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட இவர் அதேவருடம் அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இலங்கை அரசாங்கத்தால் அந்நாடுகளின் மனிதவளங்குறித்த திட்டங்களை ஆராய்ந்துவர அனுப்பப்பட்டார்.

1967 மே மாதம் பாங்கொக் நகரில் ஐக்கிய நாட்டின் ஆசிய தூரகிழக்குப் பொருளாதாரக் குழுவின் ஆதரவில் நடைபெற்ற குடியமர்தலும் நகர வளர்ச்சியும் என்ற கருத்தரங்கில் ஐக்கியநாட்டின் அழைப்பை ஏற்று பங்குபற்றினார். அதே வருடம் ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் நடைபெற்ற ஜனத்தொகை மகாநாட்டிலும் இவ்வருடம் பெப்ரவரி மாதம் லண்டனில் சசக்ஸ் சர்வகலாசாலையில் நடைபெற்ற கல்வியும் தொழில் வசதிகளும் என்ற கருத்தரங்கிலும் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

இவர் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திரு. முருகேசு சின்னத்தம்பி தம்பதிகளின் இளைய புத்திரராவர்.

## கண்டெடுக்கப்பட்டது

வண்ணார்பண்ணை மேற்கு ஆறுகாலமடத்துக்கருகாமையில் இ. இராசலிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட கணக்குப் புத்தகமொன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

# இடமாற்றம் ரத்து

அளவெட்டி, வெள்ளி

மயிலிட்டி கிராமசபையில் விகிதராகக் கடமையாற்றி, கல்முனைப் பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட திரு. இ. பரமேஸ்வரநாதனின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது.

# இடமாற்றம்

அளவெட்டி, வெள்ளி

மயிலிட்டி கிராமசபையில் மின்சார கம்பியிடுவோனாகக் கடமையாற்றிய திரு. நா. தம்பிஐயா பதவியுயர்வு பெற்று வருகிறமாதம்முதல் நல்லூர் கிராமசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அளவெட்டி, வெள்ளி

ஆயுள்வேத வைத்தியர் திரு. எஸ். சுந்தரலிங்கம் வருகிற மாதம் மயிலிட்டி கிராமசபை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுன்னாகம் பட்டின சபை ஆயுள்வேத வைத்தியசாலையில் பல காலமாகக் கடமையாற்றினவர்.

## "நூல் நூற்றல் இயந்திரசாலை நிறுவுக"

அளவெட்டி, வெள்ளி

கொழும்புத் திட்டத்தின் கீழ், பிற நாடுகளின் உதவியைக்கொண்டு இலங்கை அரசாங்கம் நிறுவவிருக்கும் நூல் நூற்றல் இயந்திரசாலைகளில் ஒன்றை, மயிலிட்டிக்கிராமசபையின் எல்லைக்குள் நிறுவித்தருமப்படி அரசாங்கத்தைக் கோரும் தீர்மானமொன்று மயிலிட்டிக் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. வ. கிருஷ்ணராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## சோஷலிச தமிழரசுக் குழு

அல்லைப்பிட்டி, வெள்ளி

தீவுப்பகுதி சோஷலிச தமிழரசுக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வ. சண்முகராசா, காரியதரிசி கே. பொன்னம்பலம், தனாதிகாரி இ. கனகலிங்கம்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# 'சமஷ்டியை கைவிட முடியாது' பொதுக் கொள்கைபற்றி ஆராயலாம்

கொழும்பு வெள்ளி

சமஷ்டி ஆட்சி அமைக்க வேண்டுமென்பது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைமட்டுமல்ல அதன் கொள்கையும் இலட்சியமுமாகும். சமஷ்டிக் கொள்கையைத் தமிழரசுக்கட்சி கைவிட வேண்டுமெனக் கேட்பது கம்யூனிஸ்ட்கட்சி, கம்யூனிஸத்தை அதன் கொள்கையை கைவிடவேண்டுமென்று கேட்பது போன்றதாகும்" என்று தமிழரசுக்கட்சி ஸ்தாபகதலைவர்களில்ஒருவர்நமது நிருபரிடம் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் நலனைக் கருதி தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் ஒத்துழைப்புக்குச் செய்யப்படும் முயற்சி இது முதல்தடவையல்ல வென்றும் தேர்தல் நெருங்கும் சமயங்களில் இது போன்ற முயற்சிகள் நடைபெறுவது வழக்கம்தான்என்றும் ஆனாலும் பொதுக் கொள்கைத்திட்ட மொன்றைவெளியிட்டு அத்திட்டத்தின்கீழ் இரு கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமென எவரும் ஒரு பொதுக்கொள்கைத்திட்டத்தைச் சமர்ப்பித்தால் அதைப் பரிசிலனை செய்யதமிழரசுக்கட்சி தயாராக இருக்கிறதென்றும் அத்தலைவர் தெரிவித்தார்.

சமஷ்டிக் கொள்கைதான் தமிழரசுக்கட்சிக்கும்தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்குமிடையிலுள்ள முக்கிய வேறுபாடு என்றும் அதை தமிழரசுக் கட்சி கைவிடவேண்டும் அல்லது தற்காலிகமாக கைவிடவேண்டுமென்று தமிழ்க் காங்கிரஸ்தலைவர் கூறியிருப்பதன்படி நாங்கள் சமஷ்டிக் கொள்கையை கைவிட்டு அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கிறோமென்று வைத்துக்கொண்டால் தமிழ்க்காங்கிரசுடன் மட்டும் தானா நாங்கள் சேர்ந்து உழைக்கவேண்டிய அவசிய மேற்படும்? என்று அவர் கேட்டார். தமிழ்க்காங்கிரஸ் கட்சி மட்டுமல்லாது ஐக்கிய தேசியக்கட்சிக்கும் எங்கள் கட்சிக்குமிடையில்கூட சமஷ்டிக் கொள்கைதான் முக்கிய வேறுபாடே தவிர வேறு ஒன்றிலும் அபிப்பிராயபேதமில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் கூட சமஷ்டிக்கொள்கைதான்வேறுபாடாகஇருக்கிறது. சமஷ்டிக்கொள்கையை நாங்கள் கைவிட்டால் இதர சகல அரசியல் கட்சிகளுடனும் நாங்கள் சேர்ந்து கொள்ளலாம். ஆனால் சமஷ்டி ஆட்சி அமைக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கையும் இலட்சியமுமாகும். சமஷ்டி ஆட்சி அமைப்பதன் மூலம் தான் இலங்கையைப் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் பல இன மக்கள் வாழும் நாட்டுக்குப் பொருத்தம் என்பது உலக நாடுகள் பலவற்றின் சரித்திரங்களிலிருந்து நாம் அறிந்தஉண்மை என்று அவர் கூறினார்.

## மக்க[ள்] கட்ட[ளை]

"சமஷ்டி ஆட்சி அமைக்க வேண்டும்" என்று நாம் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் எங்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள் சமஷ்டி கொள்கையின் மீதே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம். அதை ஏற்றே வடக்கு கிழக்கு மாகாண மக்கள் எங்களைத் தெரிவு செய்து அனுப்பியிருக்கின்றனர். அவர்களின் அனுமதியின்றி அவர்களுடைய கட்டளையை மீறி பெருமல் சமஷ்டிக் கொள்கையை நாங்கள் எப்படி கைவிட முடியும்?" என்று அவர் கேட்டார்.

தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ்ஒற்றுமைக்குசில தமிழ்ப் பிரமுகர்கள் செய்யும் முயற்சி பற்றி அவர் குறிப்பிடுகையில், [illegible] யாரும் தங்களை இன்னும் சந்திக்கவில்லை என்றும் அவர்கள் ஒரு பொதுக் கொள்கைத் திட்டம் வகுத்துச்சமர்ப்பித்தால் உபயோகமாக இருக்குமென்றும் அவர் சொன்னார். சமஷ்டி இலட்சியத்தைக் கைவிடும்படி அவர்கள் தங்களைக் கேட்பார்களெனத் தாம் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லையென்றும் அவர் சொன்னார்.

வலி கிழக்கு தமிழாசிரியர் சங்க

# பேச்சுப் போட்டி முடிவுகள்

உரும்பராய், வெள்ளி

வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கத்தினரால் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

கீழ்ப்பிரிவு ஆண்கள்: பொ. வரதகுலசிங்கம், ஆர். சி. பாடசாலை, கோப்பாய் தெற்கு; ப. தங்கராசா, டைராசா இராமலிங்க வித்தியாசாலை, ஆவரங்கால்; பொ. கெங்காதரன், இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி தெற்கு.

கீழ்ப்பிரிவு பெண்கள்: சு. சாந்தினி, சைவத் தமிழ்வித்தியாசாலை, உரும்பராய்; க. திருமாதேவி, கந்தவேள் வித்தியாசாலை, கோப்பாய்; வ. வசந்தாதேவி, சரவணபவானந்த

வித்தியாசாலை, கோப்ப[ாய்].

மத்தியபிரிவு ஆண்கள்: [illegible] குணராசா, நடராச இ[ராம]லிங்க வித்தியாசாலை, [ஆவ]ரங்கால்; மா. கருண[ா...] சைவத்தமிழ் வித்தியாச[ாலை], உரும்பராய்; இ. [...]ராசா, எம். எம். [பாட]சாலை, ஆவரங்கால்.

மத்தியபிரிவு பெண்[கள்]: சி. நகுலாதேவி, சை[வ] தமிழ் வித்தியாசாலை, உ[ரும்]பராய்; க. புஷ்பரா[...] சரவணபவானந்த வித்[தியா]சாலை, கோப்பாய்; இராஜேஸ்வரி, எம். [எம்.] பாடசாலை, ஆவரங்[கால்].

மேற்பிரிவு ஆண்[கள்]: இ. குகலிங்கம், சை[வ] தமிழ் வித்தியாசாலை, [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் நாளை நடைபெறும் ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

## அமைதியாக பக்திபூர்வமாக நடைபெறும் என்கிறார் எம். பி.

திருக்கோணமலை கோணேஸ்வர புனித பிரதேச கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்திலிருந்தும் பெருந்தொகையானோர் வரப் போகிறதென்றும், மலைநாட்டிலிருந்தும் பலர் வருவார்களென்றும் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோர் எதிர்பார்த்திருக்கிறார்கள் என்று ஒரு சாரார் கூறிக்கொள்கின்றனர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நாளை நடைபெற விருப்பதாகவும் நாட்டிலுள்ள சகல இந்து சங்கங்களையும் மன்றங்களையும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படி குளக்கோட்டன் இந்து இளைஞர் மன்றம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் இந்த வேண்டுகோளுக்குச் சைவப் பொதுமக்களிடமிருந்து ஆதரவு கிடைத்திருப்பதாகவும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது. இலங்கையில் பல இந்து மன்றங்களும் சங்கங்களும் குளக்கோட்டன் இந்து இளைஞர் மன்றத்திற்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளன.

"இவை இவ்வாறிருக்க திருக்கோணமலை ஆட்சி மன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பிரமுகருமான திரு. க. ம. மாணிக்கராசா, "அரசியலுக்கும், மத சம்பிரதாயங்களுக்கும் எந்தவித தொடர்புமில்லையென்றும் இதனுல் அரசியல் மதத்துடன் கலந்துவிடக் கூடாதென்றும் ஆகவே எந்தவித ஆர்ப்பாட்டங்களுக்கோ, பிரமாண்ட ஊர்வலங்களுக்கோ தாம் ஆதரவளிக்கவில்லை" என்றும் சாத்வீகமான வகையில் ஆலயத்திலிருந்து சைவபக்தர்களும் அடியார்களும் பக்திப் பாடல்களுடனும் பஜனையுடனும் அமைதியாக முற்றவெளியை வந்தடைந்து அங்கு கட்சி சார்பற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்துள்ளார். இவ்வூர்வலம் இம்மாதம் 29-ம் திகதி [நாளை] பிற்பகல் 2 மணிக்குக் கோணேஸ்வராலயத்திலிருந்து புறப்படவிருக்கிறது.

இராவணன், மனுநீதி கண்ட சோழன் குளக்கோட்டன், கஜபாகு ஆகியோரின் சிலைகளைத் தாங்கி கொண்டு ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களைப் பாடிக் கொண்டு செல்லும் ஊர்வலத்தார் முற்ற வெளியைச் சென்றடைவார்கள் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இவற்றில் இராவணன் சிலை மட்டுமே ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும் என்று திருமலைப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்துள்ளார். கோணேஸ்வர ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் டாக்டர் க. சு. சித்திரவேல் இக் கூட்டத்திற்குத் தலைமைதாங்குவார் என்று கணரோட்டி விளம்பரங்களில் கொடுக்கப்பட்டிருந்தபோதும் இவர் சுகயீனமுற்றிருக்கும் காரணத்தால் உபதலைவரான வழக்கறிஞர் எம் கே. செல்லராசா தலைமைவகிப்பாரெனத் தெரியவருகிறது.

குளக்கோட்டன் இந்து இளைஞர் மன்றம் அந்த ஊர்வலத்திலும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொள்ள விரும்பும் ஸ்தாபனங்களைத் திருக்கோணமலை டொக்யார்ட் 418-ம் இலக்கத்திலுள்ள சங்கச்செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டிருக்கிறது.

### கணக்கியல் பட்டதாரிகள் விபரம்

உரும்பராய், வெள்ளி

மருதானை நுண்தொழிற் கல்லூரியில் சென்றமாதம் நடைபெற்ற கணக்கியல் பட்டதாரிகளுக்கான முதலாம் வருடப் பரீட்சையில் சித்திபெய்தியவர்களின் பெயர் விபரம் வருமாறு:

டீ. எஸ். பீ. வீரசிங்க, கே. செல்வரத்தினம், கே. கணேசலிங்கம், சீ. சதானந்தன், ஏச். பீ. குணதாசா, செல்வி ப. உ. டீ. சொ. சிறிவர்தன, ஜீ. ஜீ. எவ். குணசேகரா, ஜே. ஏ. பி. எல். ரணசிங்க, வே. பி. எஸ். ஜெயவீர.

டீ. எஸ். பீ. வீரசிங்க, கே. செல்வரத்தினம், கே. கணேசலிங்கம் ஆகிய மூவரும் இலங்கை தொழிற் கல்லூரிப் பிரவேசப்பரீட்சையின் புள்ளிவிபரப்படி முதல் ஐவருக்குள் சித்தியடைந்தமையினுல் இலங்கை அரசாங்கத்தினரின் 4 வருட உபகாரச் சம்பளம் பெற்று டிப்ளோமா பட்டம் பெறுவர்.

### பரீட்சை முடிவுகள்

வெள்ளவத்தை, வெள்ளி

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் பிரவேசப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறும்.

பராய்; ம. சிவஞானம், எம். எம். பாடசாலை, ஆவரங்கால்; வே. இரத்தினசிங்கம், எம். எம். பாடசாலை, ஆவரங்கால்.

மேற்பிரிவு பெண்கள்: த. ஞானேஸ்வரி, சரவணபவானந்த வித்தியாசாலை, கோப்பாய்; கி. சண்முக சோதிமகாராணி, எம். எம். பாடசாலை, ஆவரங்கால்; பொ. கமலமலர், சைவத் தமிழ்வித்தியாசாலை, உரும்பராய்.

### பிரேரணை தோல்வி

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாஜத்தின் பத்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. பொ. கணபதிப்பிள்ளை, உபதலைவர்: திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், காரியதரிசி: திரு. கே. மாணிக்கம், நிர்வாக சபை அங்கத்தவர்கள்- திருவாளர்கள் பொ. கணபதிப்பிள்ளை, ஆ. சுப்பிரமணியம், சி. விநாயகமூர்த்தி, சோ. சிவராசா.

கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எம். கனகசபை மேற்படி சமாசத்தின் வளர்ச்சியைப்பற்றிப் பேசினார். சமாசத்தின் கிளைகளைக் கடை மூடப்படவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட பிரேரணை 10 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

### ஜிப்சத்துடன் பாகிஸ்தான் டிங்கிகள்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு பாகிஸ்தானிலிருந்து 'ஜிப்சம்' கற்களுடன் இரண்டு டிங்கிகள் வந்துள்ளன. இதுவரை நான்கு டிங்கிகள் காங்கேசன்துறை துறைமுகம் வந்து சேர்ந்துள்ளன. இன்னும் ஒரு டிங்கி ஜிப்சம் இறக்க வரவிருக்கின்றது.

### திராட்சை விலை அதிகரிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

கடந்த வருட வெள்ளப் பெருக்கின்பின் இப்பகுதிகளில் திராட்சைவருமானம் குறைந்துள்ளது. திராட்சைக் கொடிகளில் நோய் இருப்பதே இதற்குக் காரணம் என நம்பப்படுகிறது. தற்போது திராட்சைப் பழக் காலமாயிருந்தும் கடந்த வருடங்கள் போன்று அறுவடை செய்யப்படவில்லை. இதனால் விலையிலும் உயர்வு ஏற்பட்டுள்ளது.

### கல்வி அமைச்சர் மீதான அவநம்பிக்கை பிரேரணை

#### எதிர்க்கட்சியினர் அவசரம்

கொழும்பு, வெள்ளி

கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது விரைவில் விவாதிப்பதற்கு எதிர்க்கட்சியினர் முயற்சி செய்துவருகின்றனர்.

தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறியுள்ள இச்சமயத்தில் கல்வி அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால், அந்தப்பிரேரணையை ஆதரித்து தமிழரசுக்கட்சியினர் வாக்களிப்பார்களென்று எதிர்க்கட்சியினர் எதிர்பார்க்கின்றனர். தமிழரசுக்கட்சியினர் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தால் சில சமயம் அரசாங்கம் கவிழக்கூடிய நிலை ஏற்படலாமென்றும் எதிர்க்கட்சியினர் எதிர்பார்க்கின்றனர்.

### அக்டோபர் 22-ல் விசாரணை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த ஏ. பொன்ராஜா, வ. விஜயகுமார், க. கந்தசாமி ஆகிய மூவரும் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அதே இடத்தைச்சேர்ந்த தம்பையா-அரசு என்பவருடைய வீட்டுக்குத் தீவைத்ததாகவும், துப்பாக்கிகளால் பயமுறுத்தினதாகவும், உடமைகளுக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி முல்லைத்தீவுப்பொலிசாரால் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்தமாதம் 22-ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

### யாழ்ப்பாணக்கல்லூரி முன்னுள் தலைவர் காலமானர்

எலிசபெத், நியூஜேர்சி, செப். 27

வட்டுக்கோட்டையிலிருக்கும் யாழ்ப்பாணக்கல்லூரி முன்னுள் தலைவரான டாக்டர் சிட்னி கே. பங்கர் இங்குள்ள எலிசபெத் ஆஸ்பத்திரியில் திங்கட்கிழமையன்று காலமானர். அவருக்கு 64 வயதாகிறது.

கிறிஸ்தவ தேவாலயங்களின் கூட்டமைப்பின் வெளிநாட்டு பணியில் டாக்டர் சிட்னி 30 ஆண்டுகள் சேவை செய்திருக்கின்றார்.

டாக்டர் சிட்னி 1937-ம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியராக நியமனம் பெற்று பத்து வருடங்களின் பின்னர் இக்கல்லூரியின் தலைவராக்கப்பட்டார். டாக்டர் சிட்னி தென் ஆபிரிக்காவிலிருக்கும் உம்வோட்டி என்ற இடத்தில் பிறந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் ஆபிரிக்க விவகாரங்களைப் பற்றியும் படித்துப் பட்டம் பெற்றார். பின்னர் யேல் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்று, அலபாமாவிலிருக்கும் தலதேகா கல்லூரியில் மார்க்கப் பேராசிரியராக 1935-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட இவர் இரண்டு ஆண்டுகளின் பின்னர் இலங்கை வந்து சேர்ந்தார்.

### மின்சாரம் தடை பொலிசார் சந்தேகம்

காங்கேசன்துறை, வெள்ளி

மயிலிட்டிப் பகுதியில் மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுகிறதாம்.

மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரிக்கு கிழக்கே மட்டும் இவ்வித அசம்பாவிதங்கள் நடைபெற்றுவருகிறது. கள்ளக்கடத்தற் காரர்கள் இவ்வித தடையை ஏற்படுத்தி வருவதாக இரகசியப் பொலிசாருக்கு தகவல் கிட்டியுள்ளதாக அறியப்படுகிறது. இதையடுத்து பொலிசார் இரவில்ரோந்து புரியத் தொடங்கியுள்ளனர்.

[11-ம் கலத் தொடர்ச்சி]

தற்கு இந்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் பிரசுரப்பகுதியினர் இந்த அழகான சித்திரக்கதை சித்திர வடிவ நூலை வெளியிட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் இந்நூல் கிடைக்கிறது. விலைமலிவு ஆனால் அதன்பெறுமதி பெரிது ஒவ்வொருவீட்டிலும் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டிய நூல் இது. காந்தி ஜெயந்தி நூற்றாண்டுபற்றிப் பேசும்பொழுது குழந்தைகளுக்கு காந்திமகான் பற்றித் தெரிந்துகொள்ள ஆசை வரும் அதை நிறைவேற்ற இந்த நூல்போதும்.

—ஊர்சுற்றி

### நாடும் நடப்பும்

"அவருடைய தாத்தா உத்தம்சந்தும், பின்னர் தந்தை கரம்சந்தும் போர்பந்தர் என்னும் சிறு சமஸ்தானத்தின் முக்கிய மந்திரியாக இருந்தனர்"

இப்படி கதை ஆரம்பிக்கிறது. யார்கதை என்று கேட்கிறீர்களா? காந்தி மகானின் கதைதான்.

'காந்திகதை' என்ற சிறுவர் சித்திர நூல் ஒன்று எனக்கு நேற்று வந்து சேர்ந்தது. அந்தப் புத்தகத்தின் அட்டையைப் பார்த்தவுடனேயே அதைக் கைவிட யாருக்கும் மனம்வராது. காந்தித் தாத்தா என்று சொன்னதுமே அவரது பொக்கு வாய்ச் சிரிப்பு கண்முன்னே நிற்கும். கையில் ஒரு வாழைப்பழத்தை வைத்திருக்கும் 'கொழு கொழு' என்ற அழகான குழந்தையுடன் காந்தித் தாத்தாவும் குழந்தையாகமாறி குழந்தையின் மூக்கோடு தன்மூக்கை உரசிக்கொஞ்சும்படம் அந்தப்புத்தகத்தின் அட்டையை அலங்கரிக்கிறது.

புத்தகத்தைத் திறந்ததும் அழகான வர்ணச் சித்திரங்கள் கண்ணைக் கவர்ந்திழுக்கின்றன. "அவருடைய தாத்தா உத்தம் சந்தும்" என்று சித்திரங்களுடன் காந்திகதை தொடங்குகிறது.

காந்திஜியின் தந்தை கரம்சந்த். அன்னை புத்லிபாய், சிறுவன் காந்திமுதல் 47 பக்கங்களில் காந்திஜியின் வாழ்க்கைவரலாறு வர்ணப்படங்களுடன் முடிவடைகிறது.

"நமது வாழ்வின் ஒளி மறைந்துவிட்டது. இரஞ்சீவி சத்தியத்தைப் பிரதிபலித்த ஒளி அது ... நமக்குச் சரியான வழியை நினைவுறுத்தி இப்புராதன நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத்தந்த ஒளி அது. ஊன் உதிரத்தினலான இத்தகைய மனிதர் ஒருவர் இப்பூமியின்மேல் சஞ்சரித்தார் என்பதை வருங்காலத் தலைமுறைகள் நம்புவதுகூட அசாத்தியமாயிருக்கலாம்" என்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறியவசனங்களும் கடைசியில் இடம்பெற்றுள்ளன.

0 0 0

அடுத்தமாதம் 2-ம் திகதியிலிருந்து காந்திஜெயந்தி நூற்றாண்டுவிழா ஆரம்பமாகிறது. காந்திஜி இந்தியாவில் பிறந்தாலும் அவர் இந்தியாவுக்குமட்டும் சொந்தமானவரல்லர். உலகமனைத்துக்கும் மனிதகுலம் முழுவதற்கும் அவர் சொந்தம். நமதுநாட்டிலும் பல இடங்களிலும் காந்தி ஜெயந்தி நூற்றாண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. காந்திஜியின் சீடர்களில்ஒருவரான இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஸாகிர் ஹுசெயின் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக ஜனவரிமாதத்தில் இங்குவருகிறார்.

காந்தி கதை இந்த நூற்றாண்டுக் வாழும் மக்களுடன் மறைந்துவிடக்கூடுதல்ல. மனிதகுலம் உள்ளளவும் அவர் நினைவிருப்பார். மக்கள் எப்படி வாழ வேண்டும் என்று அவர் உபதேசம் மட்டும் செய்யவில்லை, சொன்னதைச் செயலிலும் வாழ்ந்துகாட்டினவர்.

சிறுவர்கள்காந்திகதையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு கதைசொல்லும் வழக்கம் இப்பொழுது குறைந்து வருகிறது. தாத்தா பாட்டி எல்லோருக்கும் இப்போது நேரமில்லை,

குழந்தைகள காந்திகதையைத்தெரிந்து கொள்ள

[10-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் சேவைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

'யாழ்ப்பாண குடாநாட்டின் கல்வி, கலாச்சார, கைத்தொழில், விவசாய வளர்ச்சியில் பாரபட்சமின்றி அக்கறை காட்டி, அதில் பெரும் வெற்றியும் கண்ட திரு. வேணன் அபயசேகராவின் சேவையை யாழ்ப்பாண மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள், மறக்கவும் முடியாது.'

இந்தப் புகழ்மாலையை உடுப்பிட்டி எம்.பி.யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவுக்கு நேற்றுச் சூட்டினார்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தப் புகழ்மாலை சூட்டப்பட்டது. அடுத்த 5-ம் திகதியிலிருந்து தபால் மா அதிகாரியாகப் பதவியேற்கவிருக்கும் திரு. வேர்ணன் அபயசேகரா கடைசியாக நேற்று நடைபெற்ற இக்கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

திரு. எம். சிவசிதம்பரம் மேலும் தமது பாராட்டுரையில் அனைவரும் மெச்சக் கூடியவகையில் திரு. வேர்ணன் அபயசேகரா கடந்த மூன்றரை ஆண்டுகள் தனது கடமையைத் திறமையாகச் செய்துள்ளாரென்றும், விசேஷமாக இப்பகுதியில் நிலவிவரும் சமூக ஏற்றத் தாழ்வை ஒழிக்க அவர் வேறு மதத்தைச் சார்ந்தவராக இருந்தும் செய்த தொண்டுக்கு யாழ்ப்பாண மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களென்றும் தெரிவித்தார்.

சுகாதாரம், கல்வி, பொலிஸ், உள்ளூராட்சி, மாநகரசபை, பொதுவேலைப் பகுதி, சமூக சேவை ஆகிய பல இலாகாவைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகளும் இங்கு சமுகம் கொடுத்திருந்தார்கள். (ஈ. நி)

## சம்பளம்

வெள்ளவத்தை, வெள்ளி

அக்டோபர் மாதம் 18-ந் திகதி அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளத்தைப் பெறுவர். அக்டோபர் 21-ந் திகதி தீபாவளியை முன்னிட்டு இவர்களுக்கு இச் சலுகை வழங்கப்படுகிறது.

## நஞ்சிடம் தஞ்சம் புகுந்தும் பயனில்லை

யாழ்ப்பாணம், சனி

முதலில் மனைவியின் வெறுப்பு. பின்னர் குடும்பத்தவராலும் இவைகளிலிருந்து நிம்மதி பெற நச்சுத்திராவகம் அருந்தினாராம் ஒருவர்.

அருள் நச்சுத்திராவகத்திலிருந்தும் விடுதலை பெற்ற இக்கணவர் தற்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் நல்லூரைச் சேர்ந்த ஜெயரதினம் என்பவரே நச்சுத்திராவகம் அருந்திய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இவர் பொலிஸாருக்குக் கொடுத்துள்ள வாக்கு மூலத்தில் மனைவியின் மீது ஏற்பட்ட வெறுப்பினாலும், குடும்பத் தகராறினாலுமே தான்'' நச்சுத்திராவகம் அருந்தியதாகத் தெரிவித்துள்ளார். (ஈ. நி)

## நாளை திறக்கப்படும்

அளவெட்டி, சனி

நாவாந்துறை கடலட்டை சங்கத்தினர் அமைத்துள்ள புதிய கட்டிடத்தை கடற்றொழில் அதிபர் திரு. கே. பெர்னாண்டோ நாளைய தினம் திறந்துவைப்பார்.

## கிராம இணைக்கச் சபை

இளவாலை, சனி

உடுப்பிட்டி கிராம இணைக்கச் சபையின் ஆரம்பக்கூட்டம் இன்று உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது

தலைவர் திரு. எஸ். எம். செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நீதி அமைச்சைச்சேர்ந்த உயர்தர அதிகாரிகள் சிலர் கலந்து கொள்வர்.

புதுநகர், வெள்ளி

பரந்தன் தொழிற்சாலையில் வரட்சிகாரணமாக 116பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர். மழை பெய்ததைத் தொடர்ந்து ஊழியர்கள் மீண்டும் வேலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## 'அரசாங்க அதிபர் என்ற பெயர் பழசாகிவிட்டது!'

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க அதிபர்கள் என்ற பெயரை மாற்றி மாவட்ட நிர்வாக டைரக்டர்கள் என்ற பெயர் வைக்குமாறு கொண்டுவரப்பட்ட தீர்மானமொன்று ஆமோதிப்பார் இல்லாமலேயே கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மேற்குப்பகுதியிலுள்ள காரியாதிகாரி ஒருவரால் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அரசாங்க அதிபர் என்ற பெயர் குடியரசுக் காலத்தில் வைக்கப்பட்ட பழம் பெயர் என்றும், தற்போது மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களில் சகல அரசாங்க இலாகா அதிகாரிகளுக்கும் அரசாங்க அதிபரே தலைமை தாங்குவதால் இப்பெயரை மாவட்ட நிர்வாக டைரக்டராக மாற்றவேண்டுமென இத் தீர்மானத்தை பிரேரித்த சம்பந்தப்பட்ட காரியாதிகாரி இங்கு தெரிவித்தார். (ஈ. நி)

## தகாத வார்த்தை பேசி தாக்கவும் முயன்றாராம்

### கங்காணிமீது பொலிஸில் புகார்

யாழ்ப்பாணம், சனி

தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் அலுவலகத்துள் புகுந்து மேலதிகாரி ஒருவரை தகாதவார்த்தைகளால் பேசியதோடு தாக்கவும் முயன்றாராம்.

இதுபற்றிய புகார் ஒன்று பொலிஸ் சுப்பிரீண்டனிடம் நேற்றுச் செய்யப்பட்டது. இப்புகாரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 'அட்டெண்டன்ட்' ஆகக் கடமையாற்றி சில மாதங்களுக்கு முன்னர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஒருவரே நேற்று மாலை ஆஸ்பத்திரி வளவுக்குள் வந்து, ஆஸ்பத்திரி உயர்தர அதிகாரி ஒருவரை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கவும் முயன்றதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவிஷயத்தில் பொலிஸ் ஊழியர் சரியாகக் கடமையாற்றவில்லையெனவும் பொலிஸ் சுப்பிரீண்டனிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலன்விசாரணை நடைபெறுகின்றது. (ஈ. நி.)

## 'ஹோப்' டாக்டர் இங்கு செய்த சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், சனி

தற்போது யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கும் 'ஹோப்' கப்பல் டாக்டர்கள் முதலாவது சத்திர சிகிச்சையொன்றை நேற்று மாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் செய்தார்கள். இவர்கள் மேலும் 3 சத்திர சிகிச்சைகளை இன்று செய்யவிருக்கிறார்கள்.

ஒரு டாக்டரும், ஒரு தாதியும் விசேஷமாக குழந்தைகள் வயிற்றோட்ட நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காக குழந்தைகள் வார்ட்டில் கடமையாற்றி வருகிறார்கள்.

இங்கு வந்துள்ள நான்கு டாக்டர்களும், தாதிகளும் நாளை வரை இங்கு தங்கியிருந்துவிட்டு 'ஹோப்' கப்பலுக்குத் திரும்புவார்கள். (ஈ. நி)

## அரசாங்கத.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்த்தன எழுந்து மருந்து விற்பனையில் டாக்டர்கள் கமிஷன் வாங்குவதாகக் கூறியது தாமேதான் என்றும் டாக்டர் பெரேரா அல்லவென்றும் சொன்னார்.

இதைத் தொடர்ந்து நல்லூர் எம்.பி. கூறிய வார்த்தைகளை வாபஸ் பெறும்படி சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் நாகநாதன் எழுந்து டாக்டர் பெரேராவிடம் கரம்கூப்பி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தாம் கூறிய வார்த்தைகளை தாம் வாபஸ்பெற்றுக் கொள்வதாகவும் அவர் சொன்னார்.

திரு. ஜோர்ஜ் ராஜபக்ச— அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சியினர் வாபஸ் பெற்றமாதிரி இது இருப்பதாகக் கூறினார்.

இதன்பின் சபை பல உபமானப் பிரேரணைகளை நிறைவேற்றியது.

ரூ. 20 கோடி உள் அடக்கும் இந்த உபமானப் பிரேரணைகளை நிறைவேற்றுவதற்காக சபை இ வு முழுவதும் நடைபெற்றது.

## பெண்கள் 17

கொழும்பு, வெள்ளி

பரீட்சையில் சித்திபெற்ற டாக்டர்களாக சமீபத்தில் தெரிவு செய்யப்பட்ட 47 பேர்களில் 17 பேர் பெண்கள்.

## கெனமன் வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு பீட்டர் கெனமன் இந்தவாரே இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இங்கு கம்யூனிஸ்ட்சிப் பொதுக்கூட்டங்களில் திரு. கெனமன் பேசவிருக்கிறார். சமீபத்திய சோவியத் செக், நெருக்கடியைத் தொடர்ந்து இடதுசாரி கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினரிடையே ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதத்தை நீக்கும்நோக்கமாகவே இவர் இங்கு விஜயம் செய்வதாகவும் தெரியவருகிறது' (ஈ. நி)

## காணமல் போன மீனவரை தேடிச் சென்ற கோஷ்டி திரும்பியது

காங்கேசன்துறை, வெள்ளி

மயிலிட்டியிலிருந்து ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்காக இயந்திரப்படகில் சென்ற மூன்று மீனவர்கள் நான்கு தினங்களாகியும் இன்னும் கரை திரும்பவில்லை. இவர்களைத் தேடி இயந்திரப் படகுகளில் சென்ற இரு கோஷ்டியினர், அவர்களைப் பற்றிய தகவல் எதுவுமின்றி திரும்பி வந்துசேர்ந்துள்ளனர். காணமற்போன மீனவர் இந்தியக்கரையில் எங்காவது ஒதுங்கியிருக்கக் கூடுமென்ற நம்பிக்கையில் தகவலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

16 வயதுடைய இருவரும் திருமணம் செய்து ஒரு மாதம் கூட நிறைவேறாத 25வயது வாலிபர் ஒருவருமே காணமல் போன மூன்று மீனவருமாவர். முதல்முறை பயனளிக்காவிட்டாலும் தொடர்ந்தும் தேடும் முயற்சியில் மயிலிட்டி மீனவர் பலர் ஈடுபட்டுள்ளனர். கடற்படையினரின் உதவியும் நாடப்பட்டிருக்கிறது.

## புனிதவதி கொலை வழக்கு

# திங்கட்கிழமை தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

புனிதவதி கொலைவழக்கின் தீர்ப்பு இம்மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை வழங்கப்படும்.

சென்ற பதினொருதினங்களாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிரெட்சர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டுவந்தது.

தொல்புரத்தைச் சேர்ந்த புனிதவதி என்னும் பெண்ணை 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ந் திகதி கொலை செய்ததாக கிருஷ்ணபிள்ளை அல்லது மாயவன் என்பவர் மீது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எதிரியானமாயவன் தனக்கும் இக்கொலைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார். சாட்சியங்கள் முடிவடைந்தபின் எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. சிவா நேற்று ஆறு மணிநேரம் தொகுப்புரை நிகழ்த்தினார். இன்று காலை நீதிமன்றம் மீண்டும் கூடியபோது முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். வேரசா தொகுப்புரை நிகழ்த்தினார். அவர் தமது தொகுப்புரையை முடித்துக் கொண்டதும் நீதிமன்றம் 30-ந் திகதி திங்கட்கிழமை காலை வரைஒத்தி வைக்கப்பட்டது திங்கட்கிழமை காலை நீதிமன்றம் கூடியதும் நீதியரசர் தமது முடிவுரையை நிகழ்த்துவார். இதன்பின் ஜூரிசபையினர் மந்திராலோசனை செய்து தமது முடிவைத் தெரிவிப்பர். அடுத்து நீதியரசர் தமது தீர்ப்பை அளிப்பார்.

## அடுத்த தேர்தல் பற்றி டாக்டர் என். எம்.

கொழும்பு, வெள்ளி

அடுத்த பொதுத்தேர்தல் அடுத்த வருட நடுப்பகுதியில் நடைபெறக்கூடுமென்றும் இதற்கிடையில் இன்னொரு கொத்து அமைச்சையும் அரசாங்கம் இலவசமாகக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்றும் எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் என். எம். பெரேரா நேற்று மாலை பண்டாரநாயகா நினைவுதினக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"இப்போது பொதுத்தேர்தல் நடைபெறமாட்டாதென்றும் சமஷ்டிக்கட்சியினர் வெளியேறினாலும் ஐந்து வருட காலம் முடியும்வரை அரசாங்கம் ஆட்சியிலிருக்குமென்றும் பிரதமர் கூறிவருகிறார். இதைப்பார்த்தால் தமது நிழலைக்கண்டே பிரதமர் பயப்படுகிறார்போல் தோன்றுகிறது'' என்றும் டாக்டர் பெரேரா கூறினார்.

தேர்தல் இப்போது நடைபெறுமென்று கூறப்பட்டாலும் அதற்கு எல்லோரும் [illegible] என்றும் அவர் சொன்னார். கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல, ஜெனரல் டிகோல் போன்று சர்வாதிகாரியாக முயற்சி செய்கிறாரென்றும் டாக்டர் பெரேரா சொன்னார்.

திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் கூட்டாட்சிக் கட்சி பதவிக்கு வந்தால் தான் சமுதாய ஒற்றுமை இந்நாட்டில் ஏற்படும் என்று கூறினார்.

திரு. பி. பி. ஜி. கலுகல்ல பேசுகையில் திரு. பண்டாரநாயக்கா உயர்ந்த தலைவரென்றும் நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த சேவை செய்தாரென்றும் சிறந்த வழி காட்டியாக இருந்தாரென்றும் அவர் விட்டுச் சென்ற காரியங்களை திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார் என்றும் கூறினார். திரு. பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமாக காலிமுக மைதானத்திலிருந்து ஆரம்பமான ஊர்வலமொன்று நகர மண்டபம் வந்தடைந்தது. இந்த ஊர்வலத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## சீனி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பினும் கூட்டுஸ்தாபனத்துக்கு உண்மை அடிப்படையிலே நியாயமாக சாம்ராச்சிய சந்தையிலிருந்து தொழிற்சாலை அடைந்த நஷ்டத்தை அதிகமான அளவில் குறைத்திருக்கமுடியும் எனவும் இங்கு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஈ. நி)

## பாலம் சீர்கேடு

கழிபுரம், வெள்ளி

பொன்னாலை - காரைநகர் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. இதனால் போக்குவரத்துக்கள் எந்த நேரமும் ஸ்தம்பிக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந்திகதி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org